# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.28/2018 நாள். 29–6–2018

## தனி அலுவலர் அவர்களின் ஜூன் 2018 மாதம் சாதாரண கூட்டப்பொருள்

29–6–2018ம் நாள் வெள்ளிகிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் ஜூன் 2018 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | ஜூன் 2018 | 0 | 0 | 5 | 11 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஜூன் 2018 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்

**பொருள் எண். 3**

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளில் உள்ள கணிணிகள் மற்றும் கணிணி சார்ந்த உபகரணங்கள் ஆண்டு பராமரிப்பு செய்ய ரூ.2.20 இலட்சத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொண்டு வரும் மெசஸ் இன்காம் சொலுசன்ஸ் நிறுவனத்தின் பராமரிப்பு காலம் 30.6.2017 தேதியோடு முடிவடைகிறது. மெசஸ் இன்காம் சொலுசன்ஸ் நிறுவனம் தனது 5.6.2018ம் தேதிய கடிதத்தில் கணிணிகள் பராமரிப்பு பணி மேற்கொள்ள கடந்த ஆண்டு விலை விகிதத்தில் புதுப்பித்து தர கோரியுள்ளனர். நல்ல முறையில் பராமரிப்பு பணி மேற்கொள்வதால் 1.7.2018 முதல் 30.6.2019 வரை ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்து கொள்ள நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 4**

அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 1920ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 124 டி

உட்பிரிவு (13)ன் படி மேற்படி சட்ட உட்பிரிவு (2)ன் படி அரசு நிர்ணயித்துள்ள தொழில் வரி விகிதங்களின் படி தற்போது விதிக்கப்படும் தொழில்வரி விகிதங்களை 01.10.2018ன் முதல் உயர்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12503/18/ஆர்1 நாள் 21.05.2018ன் படி 01.10.2018 முதல் 35 சதவீதம் ஏற்கனவே உள்ள தொழில் வரியில் உயர்வு செய்யவும் அதிகபட்சமாக இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு கூறு 276(2)ன் படி தொழில் வரி அரையாண்டிற்கு ரூ.1250/-க்கு மிகாமல் கீழ்காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மறு நிர்ணயம் செய்ய 01.10.2018 இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டதற்கு ஆட்சேபணை ஏதும் இருப்பின் அதனை எழுத்து மூலம் நகராட்சி அலுவகத்தில் தெரிவிக்க வேண்டி நாளிதழில் விளம்பரம் செய்தததில் ஆட்சேபனை ஏதும் வரப்பெறவில்லை. எனவே தொழில் வரி உயர்த்தி நிர்ணயம் செய்தததை மாவட்ட அரசு நாளிதழில் விளம்பரம் செய்ய நகரமன்றத்தின் அனுமதிகாக வைக்கப்படுகிறது.

| வ.எண். | தோராய அரையாண்டு வருவாய் | 01.10.2013 முதல் அமுலில் ஏற்கனவே உள்ள தொழில் வரி | 01.10.2018 முதல் நிர்ணயம் செய்யப்பட வேண்டிய தொழில் வரி |
|---|---|---|---|
| 1 | ரூ.21000 வரை | - | – |
| 2 | ரூ.21001 முதல் 30000 வரை | 122 | 165 |
| 3 | ரூ.30001 முதல் 45000 வரை | 309 | 417 |
| 4 | ரூ.45001 முதல் 60000 வரை | 610 | 824 |
| 5 | ரூ.60001 முதல் 75000 வரை | 919 | 1241 |
| 6 | ரூ.75001 முதல் அதற்கு மேலும் | 1219 | 1250 |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 5**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–19ம் நிதியாண்டில் சாலை பணிகளை மேற்கொள்ள அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற TURIP 2018–19க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் நகராட்சிக்கு சாலை பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| நகராட்சி / மாநகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| அனகாபுத்தூர் | 5.00 | 1.90 | 1.50 | 1.10 | 0.50 |

எனவே மேற்காண் நிதி ஒதுக்கீட்டின்படி சாலை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

2. நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களுக்கு தினந்தோறும் குடிநீர் வழங்கும் பொருட்டு 2 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 55 கிலோ மீட்டருக்கான குடிநீர் பகிர்மான குழாய்கள் சாலையினை தோண்டி அமைக்கும் பணியினை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு சுமார் 15 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகள் முடிவுற்றது. இச்சாலைகள் அனைத்தும் மிகவும் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்திற்கு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி திட்டத்தில் உள்ள சாலைகளை வரும் மழை காலத்திற்கு முன்பாக செப்பணிட பட வேண்டியுள்ளதால் மேற்படி திட்ட நிதி ஒதுக்கீட்டின் படி சாலை பணிகளை மேற்கொள்ளலாம்.

<u>**பொருள் எண். 6**</u>

பொது சுகாதார பிரிவிற்கு கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள அதற்கான மதிப்பீட்டு தொகைக்கு நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பசுமை உரக்குடிலில் உரங்களை சலிக்கும் இயந்திரம் 2 எண்ணம் சப்ளை செய்தல் பணி | 1.50 |
| 2. | பசுமை உரக்குடிலில் ஈக்களின் எண்ணிக்கையை கட்டுபடுத்தும் எரியூட்டும் இயந்திரம் 12 எண்ணம் சப்ளை செய்தல் பணி | 2.20 |
| 3. | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 9 இலகுரக வாகனங்களில் ஒலி பெருக்கி பொருத்தும் பணி | 1.50 |
| 4. | நிலவேம்பு குடிநீர் வழங்கும் பதிவேடுகள் 130 எண்ணம் சப்ளை செய்தல் பணி | 1.30 |

<u>**அலுவலக குறிப்பு**</u> : மேற்படி பணிகளுக்கு உண்டான தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

1. பணியின் அவசர அவசியம் கருதி, நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>**பொருள் எண். 7**</u>

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் எதிர் வரும் பருவ மழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட விழிப்புணர்வு ஸ்டிக்கர் 10,000 எண்ணங்கள் மற்றும் மக்கும், மக்காத வகை குப்பைகளை பிரித்து வழங்கும் பொருட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட விழிப்புணர்வு ஸ்டிக்கர் 10,000 எண்ணங்கள் சப்ளை செய்ய 07.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு

இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | அரும்பாக்கம் ஸ்டேஷனரிஸ் & பிரிண்டிங் இன்டஸ்டிரியல் கோ–ஆப்ரேடிவ் சொசைட்டி லிட், 24/20, துரைப்பிள்ளை தெரு, ஸ்ரீ சக்தி நகர், அரும்பாக்கம், சென்னை-106. | வேலூர் ஸ்டேஷனரிஸ் & பிரிண்டிங் இன்டஸ்டிரியல் கோ–ஆப்ரேடிவ் சொசைட்டி லிட், எண்.37,தென்னைமரம் தெரு, வேலூர் 01. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர் (மல்டி கலர்) | 17.70 | 18.29 |
| 2. | மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் பிரித்து வழங்குதல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர் (மல்டி கலர்) | 17.70 | 18.29 |

<u>அலுவலக குறிப்பு</u> 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள அரும்பாக்கம் ஸ்டேஷனரிஸ் & பிரிண்டிங் இன்டஸ்டிரியல் கோ–ஆப்ரேடிவ் சொசைட்டி லிட், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு கூட்டம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண். 8</u>

14.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

| வ. எண். | விபரம் | திருமுருகன் டிரேடர்ஸ், 5/3,செல்லாண்டியம்மன் கோயில் தெரு, கோட்டை மெயின் ராடு, நாமக்கல் – 001. | ஸ்ரீ பிளாஸ்டோ டெக், 31/1, 6வது மெயின் ரோடு, திருமுடிவாக்கம், சென்னை – 044. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | செப்டிக் டேங்க் காற்றுக் குழாயில் கட்டப்படும் கொசுவலை | 29.00 | 31.00 |
| 2. | EMI Solution | 950.00 | 1100.00 |

<u>அலுவலகக்குறிப்பு</u> 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமுருகன் டிரேடர்ஸ், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 9**

அனகாபுத்தூர் நகராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் வார்டு எண்.17ல் பாரி நகர் அன்னை குடியிருப்பு மற்றும் அண்ணல் காந்தி நகர் 3வது தெருவில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி உயர்மின் கோபுரங்களுக்கு மின் இணைப்பு பெற பதிவு கட்டணமாக முறையே தொகை ரூ.8800/—ஐ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 10**

29.06.2018—ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | பசுமை உரக்குடிலில் உரங்களை சலிக்கும் இயந்திரம் 2 எண்ணம் சப்ளை செய்தல் பணி | 1.50 | பேன்சி ஏஜென்ஸி ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | குறைவு அதிகம் |
| 2. | பசுமை உரக்குடிலில் ஈக்களின் எண்ணிக்கையை கட்டுபடுத்தும் எரியூட்டும் இயந்திரம் 12 எண்ணம் சப்ளை செய்தல் பணி | 2.20 | பேன்சி ஏஜென்ஸி ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | குறைவு அதிகம் |
| 3. | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 9 இலகுரக வாகனங்களில் ஒலி பெருக்கி பொருத்தும் பணி | 1.50 | பேன்சி ஏஜென்ஸி ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | குறைவு அதிகம் |
| 4. | நிலவேம்பு குடிநீர் வழங்கும் பதிவேடுகள் 130 எண்ணம் சப்ளை செய்தல் பணி | 1.30 | பேன்சி ஏஜென்ஸி ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | குறைவு அதிகம் |

**அலுவலக குறிப்பு :** வரிசை எண். 1 முதல் 4 வரை உள்ள பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.11</u>

டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேற்படி ஆய்வுக் கூட்டத்தில், கொசு ஒழிப்பு மருந்துகள் போதிய அளவில் இருப்பு வைத்துக்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டன. தற்போது பொது சுகாதாரப் பிரிவில், கொசு ஒழிப்பு மருந்துகள் இருப்பில் குறைவாக உள்ளதால், கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியினை தீவிரப்படுத்த பைரித்திரம் 2% என்ற புகைமருந்து 200 லிட்டரும், மாலத்தியான் டெக்னிக்கல் கிரேடு 95% 100 லிட்டரும் மற்றும் டெமிபாஸ் 50% EC 100 லிட்டர் மற்றும் பெந்தியான் 82.5% 100 லிட்டரும் பொது மேலாளர், தமிழ்நாடு மெடிக்கல் சர்வீசஸ் கார்ப்பரேசன் லிமிடெட், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவு ரூ.5.30 இலட்சம் ஆகும்.

**<u>அலுவலக குறிப்பு :</u>** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 12</u>

27.06.2018–ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.2 பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி | 2.00 | எம்.ஆஷா<br>ஏ.சுசீலா | குறைவு<br>அதிகம் |
| 2 | வார்டு எண்.4 பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி | 2.00 | எம்.ஆஷா<br>ஏ.சுசீலா | குறைவு<br>அதிகம் |
| 3 | வார்டு எண்.7 பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி | 2.00 | எம்.ஆஷா<br>ஏ.சுசீலா | குறைவு<br>அதிகம் |
| 4 | வார்டு எண்.14 பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணி | 2.00 | எம்.ஆஷா<br>ஏ.சுசீலா | குறைவு<br>அதிகம் |
| 5 | வார்டு எண்.16 திரு,வி,க தெருவில் உள்ள | 1.50 | வி.குணாளன்<br>கே.உமாபதி | குறைவு<br>அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கைப்பம்பினை அகற்றி மின் மோட்டார் பொருத்தும் பணி | | | |
| 6 | வார்டு எண்.16 செந்தமிழ் சாலையில் உள்ள கைப்பம்பினை அகற்றி மின் மோட்டார் பொருத்தும் பணி | 1.50 | வி.குணாளன்<br>கே.உமாபதி | குறைவு<br>அதிகம் |
| 7 | பஜார் தெருவில் நகராட்சி வாகனங்கள் நிறுத்த வாகன நிறுத்துமிடம் அமைத்தல் பணி | 9.50 | என்.சரவணன்<br>டி.செந்தமிழ் | குறைவு<br>அதிகம் |
| 8 | நகராட்சி அலுவலக வளாகத்தில் ஈப்பு வாகனம் நிறுத்த வாகன நிறுத்துமிடம் அமைத்தல் பணி | 4.00 | ஆர்.செந்தில் குமார்<br>ஏ.சிவா | குறைவு<br>அதிகம் |
| 9 | சமுதாய கூடத்தின் வடக்கு புறம் சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 5.00 | டி.கே.இண்டஸ்ட்ரியல்<br>வி.குணாளன் | குறைவு<br>அதிகம் |
| 10 | சமுதாய கூடத்தின் தெற்கு புறம் சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 4.50 | டி.கே.இண்டஸ்ட்ரியல்<br>வி.குணாளன் | குறைவு<br>அதிகம் |
| 11 | சமுதாய கூடத்தின் மேல் தளத்தில் மின்சார பணிகள் மற்றும் பிற வேலைகள் செய்தல் பணி | 4.50 | ஏ.சிவா<br>ஆர்.செந்தில் குமார் | குறைவு<br>அதிகம் |
| 12 | சமுதாய கூடத்தின் முன்புறம் பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 4.00 | ஏ.சிவா<br>ஆர்.செந்தில் குமார் | குறைவு<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 13</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பபட்ட பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 35 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழை நீர் கால்வாய் அமைக்கப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. வெள்ள நிவாரண முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்வாயில் உள்ள மண் அடைப்புகளை அகற்றி மழை நீர் தங்கு தடையின்றி செல்ல நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் கால்வாயில்

உள்ள மண் அடைப்புகளை அகற்றிட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண். 14</u>**

அனகாபுத்துார் நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வரும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு வருகிறது. இதில் மக்கும் குப்பைகளை நகராட்சி மூலம் உரமாக்கப்பட்டு வருகிறது. மக்காத குப்பைகளை அரியலூார் மாவட்டத்தில் உள்ள அல்ட்ரா டெக் சிமெண்ட் ஆலைக்கு அளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் 10 ஆண்டுகளுக்கு செய்யப்பட்டுள்ளது. உரக்கிடங்கில் உள்ள மக்காத குப்பைகளை லாரி மூலம் வாடகை அடிப்படையில் எடுத்த செல்லவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு, மூன்று மாத காலத்திற்கு பணியை மேற்கொள்ளவும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 15</u>**

நகராட்சி நிர்வாக ஆணையரக நகரமைப்பு பிரிவு துணை இயக்குநர் அவர்களால் அனுமதியற்ற மனைப்பிரிவு / மனைகள் வரன்முறை திட்டத்தின்கீழ் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஆட்டோ விளம்பரம், சிறப்பு முகாம், நாளிதழ்களில் விளம்பரம், துண்டு பிரசுரம் பேனர்கள் வைக்கப்பட வேண்டும் என அறிவுறியத்தின்பேரில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தினால் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 44 மனைபிரிவுகளில் பொதுமக்கள் அறியும் விதமாக அந்தந்த மனைப்பிரிவுகளிலேயே விளம்பரம் பேனர்கள் வைக்கப்பட வேண்டும் என அறிவிறுத்தியதன் இணங்க பேனர்கள் வைக்கவும் மற்றும் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு உள்ள பூங்கா, திறவிடம் மற்றும் சிறுவர் விளையாட்டு இடங்களின் விவரம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் விதமாக இடங்களில் அறிவிப்பு பேனர்கள் வைப்பதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.6.50 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 16</u>**

அனகாபுத்துார் நகராட்சி பொது சுகாதார பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர் சப்ளை செய்யும் பணிக்கு 20.03.18ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த குறைந்த ஒப்பந்ததாரர் வி.குணாளன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணிக்கான பணி உத்திரவு 02.04.18 முதல் 5 ஓட்டுநர்கள் சப்ளை செய்யும் பணிக்கு உத்திரவு வழங்கப்பட்டு

ஒட்டுநர்கள் நல்ல முறையில் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது 4 ஒப்பந்த வாகனங்கள் விடுவிக்கப்பட்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 9 இலகுரக வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளது. தற்போது பொது சுகாதார பிரிவில் பழையது 2 வாகனம் மற்றும் புதிய வாகனம் 9 சேர்த்து 11 வாகனங்கள் உள்ளது. மேற்படி ஒப்பந்தப்படி ஒப்பந்த ஓட்டுநர்கள் 5 நபர்கள் உள்ளனர் மீதமுள்ள 6 வாகனங்களை இயக்க கூடுதலாக 6 ஒப்பந்த ஓட்டுநர்கள் சப்ளை செய்ய ஏற்கனவே ஒட்டுநர்களை சப்ளை செய்யும் ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 17**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள கீழ்க்கண்ட சிறுவர் விளையாடுமிடம் மற்றும் காலி இடங்களில் சுற்றுச்சுவர் அமைத்து பூங்கா அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பாலாஜி நகர் பகுதியில் காலியாக உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவினை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 9.60 |
| 2. | சீனிவாசபுரம் பகுதியில் காலியாக உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவினை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 9.40 |
| 3. | கௌரி அவென்யூ பகுதியில் காலியாக உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவினை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | 9.50 |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.
2.மேற்படி பணிகளை சென்னை பெருநகர வளர்ச்சி குழும திட்ட நிதி அல்லது பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 18**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள இந்தியா மார்க் II கைப்பம்புகள் பழுது பார்த்து பராமரித்திட தேவையான பொருட்களை வாங்கும் பொருட்டு டான்சி பம்ப் யூனிட் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி ரூ.2,90,664/–க்கு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்குட்பட்ட அனகாபுத்தூர் கிராமம், குருசாமி நகர் விரிவு பகுதி, நில புல எண்.97/2ல் பதிவு செய்யப்பட்டுள்ள பாகப்பிரிவினை பத்திரம் எண்.5683/2012ல் கண்டுள்ளபடி திரு. வி. பாலமுரளி என்பவர் பெயரில் 1386 சதுர அடி மனையும் திருமதி. ஜி.சந்தியா என்பவர் பெயரில் 1386 சதுர அடி மனையும் உள்ளது. மேற்படி தானமாக வழங்க உத்தேசித்துள்ள சாலை பகுதியானது திரு. வி. பாலமுரளி என்பவருக்கு கிடைத்துள்ள பாக மனையில் அமைகிறது. வடக்கு தெற்கு இருபுறம்

24’0“ அடிகள் மற்றும் கிழக்கு மேற்கு இருபுறமும் 44’0“ அடிகள், ஆக 1056.0 சதுர அடி பரப்பளவு கொண்டுள்ள இடத்தை இந்நகராட்சிக்கு தானமாக வழங்க உத்தேசித்து மனு கொடுத்துள்ளார். மேற்படி இடம் தானமாக பெற்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு, வழங்கும் பட்சத்தில் கால்வாய், தெருவிளக்கு மின் கம்பங்கள் மற்றும் சாலை அமைக்க மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை நிலத்தின் உரிமையாளர் திரு. வி. பாலமுரளி என்பவரிடம் வசூலிக்கவும், தொகை செலுத்திய பின் மேற்கண்ட இடம் பதிவு செய்த தானப்பத்திர மூலம் பெற்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு எடுத்து கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** திரு. வி. பாலமுரளி, நிலத்தின் உரிமையாளர் மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்தினை செலுத்திய பின் மேற்கண்ட இடம் பதிவு செய்து தானப்பத்திர மூலம் பெற்று கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி